39

# இரண்டாம் பருவ மதிப்பீடு 2017-18
## மேனிலை இரண்டாம் ஆண்டு
## சிறப்புத்தமிழ்
# Second Term Evaluation 2017-18
## Higher Secondary Second Year
## Optional (Part III - Tamil)

வகுப்பு : HSE II

நேரம் : $2\frac{1}{2}$ மணி

மதிப்பெண் : 80

---

குறிப்பு :

- தேர்வுக்கு முன்புள்ள 15 நிமிடம் சிந்தனை நேரமாகும்.
- வழிமுறைகளை நன்கு வாசித்துத் தேவையான வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.

---

*(1, 2 வினாக்களுக்குச் சரியான விடைகளை எடுத்து எழுதுக.)* (2 × 1 = 2)

1. '<u>பார் பார்</u>' என்ற சொற்றொடரின் இலக்கணம் யாது?

   அ) இரட்டைக்கிளவி ஆ) அடுக்குத்தொடர்

   இ) பண்புத்தொகை ஈ) வினைத்தொகை

2. 'கரிப்புமணிகள்' நாவலின் ஆசிரியர்

   அ) சாண்டில்யன் ஆ) ஜெயகாந்தன்

   இ) இராஜம் கிருஷ்ணன் ஈ) புதுமைப்பித்தன்

*(3 முதல் 8 வரையுள்ள எல்லா வினாக்களுக்கும் விடை எழுதவும்.)* (6 × 3 = 18)

3. "யாதும் ஊரே யாவரும் கேளிர்
   தீதும் நன்றும் பிறர்தர வாரா"

   இப்பாடல் வரிகளால் கணியன் பூங்குன்றனார் உணர்த்தும் கருத்து பற்றிச் சிறு குறிப்பு வரைக.

4. பல மொழிகளைக் கற்பதால் ஏற்படும் நன்மைகளை எழுதுக.

5. தமிழ் வளர்ச்சி குறித்து பாரதிதாசன் கூறும் கருத்துகளைத் தொகுத்தெழுதுக.

6. 'தனியொருவனுக்கு உணவில்லையெனில் ஜகத்தினை அழித்திடுவோம்' - இக்கூற்றினை விமர்சனம் செய்க.

7. சங்க இலக்கியத்தின் சிறப்பம்சம் குறித்துக் குறிப்பு வரைக.

8. 'அடைக்கலக்காதை'யில் இளங்கோவடிகள் கோவலனுடைய நற்பண்புகளாகக் குறிப்பிடும் செய்தி யாது?

*(9 முதல் 13 வரையுள்ள எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.)* (5 × 4 = 20)

9. உங்கள் பள்ளியில் நடைபெறும் இலக்கிய மன்ற விழாவில் 'மனிதநேயம்' என்னும் தலைப்பில் சொற்பொழிவாற்றுவதற்கான உரைக் குறிப்பு தயார் செய்க.

10. மனித ருணவை மனிதர் பறிக்கும்
      வழக்க மினியுண்டோ?
   மனிதர் நோக மனிதர் பார்க்கும்
      வாழ்க்கை யினியுண்டோ?
   இப்பாடல் வரிகளின் நயம் பாராட்டுக.

11. " தூய உள்ளம் அன்புள்ளம் பெரிய உள்ளம்
   தொல்லுலக மக்களெல்லாம்
   ஒன்றே என்னும் தாயுள்ளம்"

   இப்பாடல் வரிகள் உணர்த்தும் கருத்தினை இன்றைய சமூகச் சூழலோடு ஒப்பிட்டு விமர்சனக் குறிப்பு எழுதுக.

12. "மொழி கருத்துப் பரிமாற்றத்திற்கான ஒரு கருவி மட்டுமே" இக்கருத்தோடு உடன்படுகிறீர்களா? காரண காரியத்துடன் விளக்குக.

13. தாய்மொழிவழிக் கல்வியின் சிறப்பினை மக்களுக்கு உணர்த்தும் வகையில் துண்டுப்பிரசுரம் தயார் செய்க.

*(14 முதல் 19 வரையுள்ள வினாக்களுள் எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடை தருக.)*
(4 × 6 = 24)

14. தற்காலச் சூழலில் கைத்தொழில்கள் நலிவடைந்து கொண்டிருப்பதற்கான காரணங்களைச் சுட்டிக் காட்டி உனது நண்பனுக்குக் கடிதம் எழுதுக.

15. "எல்லோரும் ஓர்குலம், எல்லோரும் ஓரினம், எல்லோரும் இந்திய மக்கள்." இப்பாடல் வரிகளில் கவிஞர் பாரதி கூறும் ஒப்பில்லாச் சமுதாயத்தை இன்றைய சமூகச் சூழலோடு ஒப்பிட்டு ஒப்பீட்டுக் குறிப்பு தயாரிக்க.

16. "வளர வேண்டியதும் வளர்க்க வேண்டியதும், மனிதத்தையே" என்னும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் பத்திரிகைத் தலையங்கம் ஒன்று எழுதி, அதற்குப் பொருத்தமான தலைப்பிடுக.

17. தமிழ் மொழிக்கும் மலையாள மொழிக்கும் இடையேயான ஒற்றுமைகளைப் பட்டியலிடுக.

18 உங்கள் ஊர் தமிழ்ச்சங்கத்தில் ஆங்கிலமொழி வழி கல்வி சிறந்ததா? தாய்மொழிவழிக் கல்வி சிறந்ததா? என்ற தலைப்பில் நடைபெறவிருக்கும் பட்டிமன்றத்தில் ஏதேனும் ஒரு அணி சார்பாக உரையாற்ற உரைக்குறிப்பு தயாரிக்க.

19. நவீன தொழில்நுட்பத்தின் வளர்ச்சி இன்றைய தொழிலாளர்களை எவ்வகையில் பாதித்துள்ளது என்பது குறித்து விளக்குக.

*(20 முதல் 22 வரையுள்ள வினாக்களில் எவையேனும் இரண்டனுக்கு விடை எழுதுக.)*
(2 × 8 = 16)

20. 'தாத்தா தொலைந்து போனார்' என்ற சிறுகதையை இன்றைய சமூகச் சூழ்நிலையோடு ஒப்பிட்டு ஒரு திறனாய்வுக் கட்டுரை எழுதுக.

21. உங்கள் பள்ளி இலக்கிய மலரில் வெளியிட 'தேசிய ஒருமைப்பாடு' எனும் பொருண்மையில் சிறப்புக் கட்டுரை தயார் செய்க.

22. "சமூக வளர்ச்சியில், மொழி முக்கிய பங்கு வகிக்கிறது" – உனது கண்ணோட்டத்தில், விமர்சனக் கட்டுரை எழுதுக.

   (குறிப்பு: பல்வகை இலக்கியத் தோற்றம், பண்பாட்டுச் சிறப்பு, சமூக நிகழ்வுகளைப் பிரதிபலித்தல்)

**Set: 1**

# இரண்டாம் பருவ மதிப்பீடு 2017-2018
# மேனிலை இரண்டாம் ஆண்டு
# சிறப்புத்தமிழ்
# மதிப்பீட்டுக் குறிப்புகள்

**Higher Secondary Second Year - Optional**

**HSE: II**

**Scoring Key**

| வரிசை எண் | மதிப்பீட்டுக் குறிப்புகள் | மதிப்பெண் விளக்கம் | மொத்தம் மதிப்பெண் |
|---|---|---|---|
| 1. | அடுக்குத்தொடர் | 1 | 1 |
| 2. | இராஜம் கிருஷ்ணன் | 1 | 1 |
| 3. | எல்லோரும் ஒன்றே என்ற மனப்பான்மை | 1 | |
| | பெரியோர்களை மதித்தல் | 1 | |
| | நற்பண்புகளைப் பெறல் | 1 | 3 |
| 4. | கருத்துப்பரிமாற்றக் கருவி | 1 | |
| | வேலை வாய்ப்பு | 1 | |
| | பிளமொழிச் சிறப்பினை அறிதல் | 1 | 3 |
| 5. | எளிய நடை | 1 | |
| | புதிய இலக்கணநூல் உருவாதல் | 1 | |
| | இலவச நூற் கழகங்கள் அமைத்தல் | 1 | 3 |
| 6. | பாரதியின் உணர்வு | 1 | |
| | பசியை ஒழிப்பதே முக்கிய நோக்காம் | 1 | |
| | பிறருக்கு உதவும் மனப்பான்மை | 1 | 3 |
| 7. | சங்க இலக்கியங்கள் | 1 | |
| | அகம், புறம் | 1 | |
| | ஐந்திணை | 1 | 3 |
| 8. | பிறர்நலம் பேணல் | 2 | |
| | பெரியோரை மதித்தல் | 1 | 3 |
| 9. | வன்முறை | 1 | |
| | மக்களுக்கு ஏற்படும் துயரம் | 2 | |
| | மனித நேயப் பண்பு | 1 | 4 |
| 10. | எதுகை, மோனை | 1 | |
| | சொல் நயம், பொருள் நயம் | 2 | |
| | ஓசை நயம் | 1 | 4 |
| 11. | அனைவரும் ஓர் குலம் | 2 | |
| | நற்பண்புகள் | 2 | 4 |
| 12. | கருத்துப்பரிமாற்றத்தோடு மட்டும் தொடர்புடையது | 2 | |
| | அறிவுசார்ந்தும், பல்துறை சார்ந்தும் தொடர்பு வேண்டும் | 2 | 4 |
| 13. | வடிவம் | 1 | |
| | தாய்மொழியின் சிறப்பு | 1 | |
| | கருத்துப்பரிமாற்றம் | 1 | |
| | அனைத்துத் துறையிலும் ஈடுபடும் திறன் | 1 | 4 |

| வரிசை எண் | மதிப்பீட்டுக் குறிப்புகள் | மதிப்பெண் விளக்கம் | மொத்தம் மதிப்பெண் |
|---|---|---|---|
| 14. | வடிவம் | 1 | |
| | புதிய தொழில் நுட்பத்தின் தாக்கம் | 1 | |
| | நலிவடைவதற்குரிய காரணம் | 2 | |
| | மொழிநடை | 2 | 6 |
| 15. | ஓருலக மனப்பான்மை | 1 | |
| | அனைவருக்கும் உணவு, உறைவிடம் | 2 | |
| | சமுதாய ஏற்றத்தாழ்வை அகற்றுதல் | 3 | 6 |
| 16. | வடிவம் | 1 | |
| | போலிச்சடங்குமுறைகள் | 2 | |
| | சமூகப்பாதிப்புகள் | 2 | |
| | விழிப்புணர்வு | 1 | 6 |
| 17. | இருமொழிகளுக்கிடையேயான உறவுமுறை | 2 | |
| | (எ.டு) கா. காவு உறவுப் பெயர்கள் | 2 | |
| | தாழ்க்கோல், தாக்கோல் | 1 | |
| | எழில்மலை, எலிமல | 1 | 6 |
| 18. | பயிற்று மொழியைத் தேர்வு செய்தல் | 2 | |
| | நன்மை, தீமை | 2 | |
| | எளிதில் புரியும் திறன் | 2 | 6 |
| 19. | நவீன தொழில் நுட்பத்தின் வளர்ச்சி | 2 | |
| | வேலை வாய்ப்புக் குறைவு | 2 | |
| | ஊதியக் குறைவு | 2 | 6 |
| 20. | கதைக் கருத்து | 2 | |
| | கதாபாத்திரப்பண்பு | 1 | |
| | கதைப்பின்னணி | 2 | |
| | நகரமயமாதல் | 1 | |
| | இயந்திரமயமாக்கல் | 1 | |
| | வடிவம் | 1 | 8 |
| 21. | சமதர்மச்சிந்தனை | 2 | |
| | சாதி, சமய ஒருமை | 2 | |
| | மனிதநேயம் | 2 | |
| | விழிப்புணர்வு | 1 | |
| | வடிவம் | 1 | 8 |
| 22. | பலவகை இலக்கியத் தோற்றம் | 2 | |
| | பண்பாட்டை விளக்குதல் (கலை, விருந்தோம்பல்) | 2 | |
| | சமூக நிகழ்வுகளைப் பிரதிபலித்தல் | 2 | |
| | பண்பாட்டுச் சிறப்பு | 1 | |
| | வடிவம் | 1 | 8 |
| | **மொத்தம்** | 80(2) | 80(2) |